IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

O.S.No. 653 /2009

Deposition of witness for PW1

Name : ஜெயா

Husband 's Name : கிருஷ்ணன்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 17 day of February, 2020.

Cross Examination Continuation

அன்னப்பரெட்டி எனது தாய் வழியில் அம்மாவை பெற்ற அம்மாவின் அப்பா ஆவார். எனது தாயார் பெயர் துளசியம்மாள். பாட்டி பெயர் அக்கம்மாள். அன்னப்பரெட்டியின் உடன் பிறந்தவர்கள் இரண்டு பேர். வழக்கு சொத்துக்கள் அன்னப்பரெட்டி கிரையம் பெற்றாரா என்றால் எனக்கு தெரியாது. அன்னப்பரெட்டிக்கும் அவரது உடன்பிறந்த இரண்டு சகோதரர்களுக்கும் இடையே பாகப்பிரிவினை நடந்ததா என்றால் நடந்தது ஆனால் எப்பொழுது நடந்தது என்றும், அதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றும் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கள் அன்னப்பரெட்டியாருக்கு சொந்தமானது என்பதை காட்ட பட்டா உள்ளது. அந்த பட்டா என்னிடம் உள்ளது அதை நான் தாக்கல் செய்யவில்லை. அன்னப்பரெட்டி வழக்கு சொத்துக்களை அனுபவம் செய்து வந்தார் என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அன்னப்பரெட்டி எழுதி வைத்த உயில் வா.சா.ஆ1-ன் அசல் பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். அன்னப்பரெட்டி எழுதி வைத்த அசல் உயில் உள்ளதா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. இந்த சொத்து சம்மந்தமாக ஏற்கனவே வேறு ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதில் அந்த உயில் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு பற்றியும் எனக்கு நேரிடையாக எதுவும் தெரியாது. அன்னப்பரெட்டியார் உயிருடன் உள்ளாரா என்றால் இறந்து விட்டார் அவர் இறந்த தேதி எனக்கு தெரியாது. அன்னப்பரெட்டி அவர் எழுதி வைத்த உயிலில் தனது காலத்திற்கு பிறகு தனது மனைவி அக்கம்மாள் அனுபவம் செய்யவேண்டும் என்றும் அதற்கு பிறகு அவரது மகள் கங்கம்மாளும் அவரதுகணவரும்

அனுபவம் செய்யவேண்டும் என்று எழுதி வைத்துள்ளாரா என்றால் மூன்று பேரும் ஒரே நேரத்தில் அனுபவிக்கவேண்டும் என்று எழுதி வைத்துள்ளார். அன்னப்பரெட்டி இறந்த பிறகு உயில் படி பட்டா மேற்படி மூன்று பேருக்கும் பெயர் மாற்றம் செய்யப்பட்டதா என்றால் மாற்றம் செய்யப்பட்டது. அதை நான் பார்த்துள்ளேன். சாட்சி தற்பொழுது மேற்படி மூன்று பேர்களின் பெயரிலும் பட்டா மாற்றம் செய்யப்படவில்லை என்று கூறுகிறார். அன்னப்பரெட்டி எழுதி வைத்துள்ள உயிலில் என்னென்ன சொத்துக்கள் எழுதி வைத்துள்ளார் என்றால் வழக்கு சொத்தை தவிர வேறு சில சொத்துக்களைப்பொறுத்து அந்த உயிலில் குறிப்பிட்டுள்ளார். தாவா சொத்துக்கள் அல்லாமல் இன்னும் சில சொத்துக்கள் உள்ளன். அவற்றைப்பொறுத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அக்கம்மாள் இறந்த பிறகு தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை எதுவும் ஏற்படவில்லை. எனது சித்தி தனலட்சுமி தாவா சொத்தின் ஒரு பகுதியை எனக்கு எழுதி வைத்தார். உயிலில் கண்ட மற்ற சொத்துக்களை விற்பனை செய்துவிட்டார்கள். எனது சித்தி தனலட்சுமியம்மாள் எழுதி வைத்த சொத்துக்கள் தாவா சொத்துக்கள் அல்ல. தாவா சொத்து வீடும், காலிமனையிடமும் ஆகும். எனது பிரமாணவாக்குமூலத்தில் வீடு என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்லவில்லை. துளசியம்மாள் மற்றும் தனலட்சுமியம்மாள் ஆகியோர் இறந்துவிட்டார்களா என்றால் எனது தாயார் 23 டிசம்பர் 2003-ல் இறந்து விட்டார். அவ்வாறு இறந்த சங்கதியை எனது தாவாவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. 2003 வரை எனது தாயார் அனுபவம் செய்துவந்தார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனது சித்தி தனலட்சுமியம்மாள் இறந்துபோகவில்லை என்றால் சரிதான். அ.வ.எண். 113/2015 என்ற வழக்கில் தனலட்சுமியம்மாள் இறந்துவிட்டதாக விளம்புகை செய்யப்பட்டார். வா.சா.ஆ2 தீர்ப்பு ஆவணத்திற்குரிய வழக்கை நான் தாக்கல் செய்யவில்லை. எனது சித்தியின் மகள் தாக்கல் செய்தார். எனது சித்தப்பா கேசவரெட்டி, மற்றும் நாராயணசாமி ஆகியோர் சேர்ந்து கிரையம் வாங்கிய விவரத்திற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணத்தின் அசல் என்னிடம் உள்ளது. கேசவரெட்டிக்கு,

நாராயணசாமி சித்தப்பா முறையாவார். கேசவரெட்டி வா.சா.ஆ2 ஆவணத்தில் இல்லாத சொத்துக்களை கிரையம் வாங்கவில்லை. நாராயணசாமிக்கும், கேசவரெட்டிக்கும் பாகப்பிரிவினை ஏற்படவில்லை. நாராயணசாமி கிரையம் வாங்கிய சொத்தை தாவாவில் 2வது அயிட்ட சொத்தாக காட்டியுள்ளேன். எனது சித்தப்பா கேசவரெட்டி, மற்றும் நாராயணசாமி ஆகியோர் பெயர்களில் சேர்ந்து கூட்டுப்பட்டா ஏற்பட்டதாக எனக்கு தெரியவில்லை. வரி கட்டினார்களா என்று எனக்கு தெரியாது. 1941ம் ஆண்டு கிரையம் சொத்தை கனகசபாபதிக்கு விற்றுவிட்டாகள். எனது சித்தப்பா கேசவரெட்டி, மற்றும் நாராயணசாமி மற்றும் மேநாதன் ஆகியோர் சேர்ந்து அடைமானம் செய்துவிட்டார்கள். அதை மீண்டும் கிரையம் பெற்றுவிட்டாகள். அதற்கான கிரைய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்தள்ளேன். மீண்டும் கிரையம் பெறும்போது எனது சித்தப்பா கேசவரெட்டியும், மற்றும் நாராயணசாமி ஆகியோர் சேர்ந்து கிரையம் பெற்றார்கள். அந்த கிரையப்த்திரம் 1941ம் ஆண்டு பெற்றார்கள். அதன் அசல் ஆவணம் என்னிடம் உள்ளது. அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல செய்யவில்லை என்றால் சரிதான். எனது சித்தப்பா கேசவரெட்டி, மற்றும் நாராயணசாமி ரெட்டியும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அவர்களது சொத்துக்களில் விஜயலட்சுமிக்கு மட்டுமே உரிமை உள்ளது என்றால் சரிதான். கேசவரெட்டி 1977-ல் இறந்துவிட்டார். கேசவரெட்டியும், நாராயசாமி சேர்ந்து கிரையம் பெற்ற சொத்தை நாராயணசாமி தனது மகன் சுப்பிரமணிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரியல்ல. வேறு சில சொத்துக்கள் பூர்வீகமாக பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். கேசவரெட்க்கும், நாராணயசாமி ரெட்டிக்கும் பாகப்பிரவினை நடந்தது அதற்கானபாகப் பிரிவினைபத்திரம் எழுதி கொண்டார்களா என்று எனக்கு தெரியாது. கேசவரெட்டியார் நாராயணசாமி ரெட்டியர் உயிருடன் இருந்த காலத்தில் தனது பாதி சொத்துக்களை பாகம் செய்துகொடுக்க கோரவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நாராயணசாமி மகன் சுப்பிரமணி ரெட்டி, வெங்கட்ட ரெட்டி என்பவருக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம எழுதி வைத்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. 2.2.1968-ல் சுப்பிரமணியரெட்டி,

வெங்கட்ட ரெட்டிக்கு செட்டில்மெண்ட ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அதுப்பற்றி எனது பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 3-ல் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு அந்த செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி தெரியும் என்றால் வழக்கு போடும்போது தெரியும் என்று சாட்சி கூறுகிறார். 1977-வரையில் கேசவரெட்டி உயிருடன் இருந்திருப்பதால் 1968-ல் எழுதி வைக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி அவருக்கு தெரிந்திருக்கும் என்றால் சரிதான். கேசவரெட்டி, வெங்கட்டரெட்டிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி கேட்டுக்கொள்ளவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. கேசவரெட்டி இந்த சொத்தின் பாதிஉரிமையாளர் என்ற அடிப்படையில் அனுபவம் செய்து வந்திருந்தால் செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி கேள்வி கேட்டிருப்பார் என்றால் சரியல்ல கேசவரெட்டி அனுபவம் செய்துவந்தார். கேசவரெட்டி அனுபவம் செய்துவந்ததற்கு வரிரசீது உள்ளன. அந்த ரசீதுகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.